தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் தேதி புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

### 30–9–2008இல் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள்

மாவட்ட ஆட்சியரின் சாலை பாதுகாப்பு கூட்ட செயல்முறையில் தெரிவிக்கப் பட்டுள்ளபடி இம்மாநகராட்சிப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்தவும் விபத்தினை தடுக்கவும் பொதுமக்கள் நலன் கருதி கீழ்க்கண்டவாறு விளக்குகள் பொருத்தவும் அதற்கான மின் இணைப்பை மாநகராட்சி மூலம் பெற்றுத்தர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்பான போக்குவரத்துப் பிரிவு ஆய்வாளர் கடிதம் நாள் 29–8–2008இல் கீழ்குறிப்பிட்ட இடங்கள் குறிப்பிட்டு அனுமதி வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1, 14 – இடங்களில் தானியங்கி சைகை விளக்குகள்
2. 23 – இடங்களில் பிரதிபலிக்கும் விளக்குகள்
3. 7 – முக்கிய சந்திப்புகளில் வீடியோ கேமரா மற்றும் பொது ஒலிபெருக்கி சாதனம் அமைத்தல்.

மேற்படி இடங்களில் அமைக்கப்பட உள்ள போக்குவரத்து சாதனங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கும், அதற்காகும் மாதாந்திர தொடர் மின் கட்டணம் இம்மாநகராட்சியால் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் பொருட்டு அமைக்கப்பட உள்ள போக்குவரத்து சிக்னல்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கலாம். அதற்கான தொடர் மின் கட்டணம் செலுத்துவது குறித்து பரிசீலிக்கலாம்.

இ3. 5066/08

**தீர்மானம் எண்: 135**

தற்போது அனுமதிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிட்டுள்ள 44 சிக்னல்கள் இயங்குவதன் மூலம் கணக்கிடப்படும் மின் நுகர்வு தொகையினை கண்காணித்து பின்னர் இது குறித்து நிரந்தமாக முடிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது

2. தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 133 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாநம) துறை நாள் 24–7–2008–ன்படி மாநகராட்சி நினைவுத்தூண் ஜெயராஜ் ரோடு சந்திப்பிலுள்ள வண்டிப்பேட்டை சர்வே வார்டு 4, பிளாக் 21இ, நகரளவு எண் 3468/2பி1 இடத்தில் புதிய மாநகராட்சி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்ட இடத்தில் நிறுவுவதற்கும் மாநகராட்சிக்கான தனிச்சின்னம், கொடி, செங்கோல், மேயர் அங்கி, அமர்வு நாற்காலி முதலியவற்றிலும் மாதிரி வடிவங்களுக்கு அரசு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1. 18217/08

**<u>தீர்மானம் எண்: 136</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

3. தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தியது அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு அரசால் ஒருமுறை வழங்கப்படும் சிறப்பு நிதி ரூ 5. 00 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை (இருபதாண்டு) எண் 109, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாநம) துறை நாள் 1–8–2008ல் அரசாணை வெளியிடப்பட்டது. மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1. 18217/08

**<u>தீர்மானம் எண்: 137</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

4. தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை சீரமைப்பு பணிகள் செய்ய முதல் கட்டமாக ரூ 698. 30 லட்சம் நிதி பங்கீடு செய்து அரசாணை (இருபதாண்டு) எண் 110 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை நாள் 1–8–2008ல் அரசாணை வெளியிடப்பட்டது. மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1. /07

**<u>தீர்மானம் எண்: 138</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

5. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதை தமிழ்நாடு அரசிதழ் எண் 231 நாள் 29–7–2008ல் வெளியிடப்பட்டது. அதன்படி அரசாணை எண் 137 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (தேர்தல்) நாள் 29–7–2008ன்படி 5–8–2008 முதல் மாநகராட்சியாக செயல்பட அரசாணை வெளியிடப்பட்டது மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1. 18217/08

**<u>தீர்மானம் எண்: 139</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

6. தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவசரச் சட்டம் 6/08 தூத்துக்குடி மாநகராட்சி மாநகராட்சிகளுக்கு உண்டான நிர்வாக அனுமதி வரம்பினை உயர்த்தி தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 27/2008க்கு திருத்தம் தமிழ்நாடு அரசிதழ் 258 நாள் 26–8–2008ல் வெளியிடப்பட்டது. மேற்படி விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : 1. பதிவு செய்யலாம்.

2. கோயம்புத்தூர் கார்போரேஷன் சட்டம் பகுதி IV 1981–ன்படி கீழ்க்கண்டவாறு மாநகராட்சிக்கு மதிப்பீடுகளுக்கான நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1 | வார்டு குழு | 5.00 லட்சம் வரை |
| 2 | ஆணையாளர் | 5.00 லட்சம் மேல் 10.00 லட்சம் வரை |
| 3 | மேயர் | 10.00 லட்சம் மேல் 20.00 லட்சம் வரை |
| 4 | மாமன்றம் | 50.00 லட்சம் மேல் 100.00 லட்சம் வரை |
| 5 | அரசு | 100.00 லட்சம் மேல் |

மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ10018217/08

**<u>தீர்மானம் எண்: 140</u>**

அலுவலகக் குறிப்புப்படி நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பு பதிவு செய்யப்பட்டது.

7. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது துவக்கவிழா 5–8–2008ல் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற உள்ளதை யொட்டி ஏற்படும் செலவினங்களுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை (பத்தாண்டு) எண் 326 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) ( மா &ம) துறை நாள் **30–7–2008** ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்: 141</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது.

**8.** இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவின் மூலம் ஆட்டோ வாகனத்தை வைத்து கொசு புகை மருந்து தெளிக்க மன்ற தீர்மான எண் **111** நாள் **31–3–2008**ன் படி கடந்த மாதங்களில் நகரின் பல இடங்களில் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மழைக்காலத்தை முன்னிட்டு **13–10–2008** முதல் **15–11–2008** வரை **(19–10–08 26–10–08, 27–10–08, 28–10–08 , 9–11–08)** மொத்தம் **28** நாட்கள்

அவசர அவசியம் கருதி புகை மருந்து தெளிக்க மன்ற முன் அனுமதியும் அதற்கான தோராயமான செலவுத்தொகை ரூ 345/– ஒரு நாள் வீதம் 28 நாட்களுக்கு ரூ 10000/–ம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு – 1. அனுமதிக்கலாம்
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

எச்4/27055/08

**தீர்மானம் எண்: 142**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

9. தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடிசை குடியிருப்புகளில் மேற்படி இடம் மாநகராட்சிக்கு தேவையாக உள்ளதால் ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தி பட்டா வழங்க இயலாமல் உள்ளவை மற்றும் நகர்ப்புற குடிசை ஆக்கிரமிப்பு குடியிருப்புதாரர்களுக்கு அவர்களின் ஏழ்மை நிலைமையினை கருத்தில் கொண்டும் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையிலும் அம்பேத்கார் நகர் வடக்கு பகுதியில் உள்ள தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சங்கரப்பேரி கிராமம் சர்வே எண் 126/3 12. 1 ஏக்கர் இடத்தில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 ஏக்கர் இடம் நீக்கி மீதமுள்ள இடத்தில் 5 ஏக்கர் இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தின் மூலம் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் குடியிருப்பு கட்டிடம் கட்டி தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தில்நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள மாநகராட்சி சட்டம் பகுதிகளின்படியும் மேற்படி ஏழைகுடிசை குடியிருப்பு ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாத வாடகை அடிப்படையில் வீடுகளை வழங்கவும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வழியாக அரசின் அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 27268/08

**தீர்மானம் எண்: 143**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

10. தூத்துக்குடி மாநகராட்சி அம்பேத்கார் நகர் தெரு வடக்கு பகுதி சங்கரப்பேரி கிராமம் சர்வே எண் 126/3ல் 12.108 ஏக்கர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 5 ஏக்கர் பரப்பளவில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தின் மூலமாக விளையாடுமிடம் மற்றும் பூங்கா ஆகிய வசதிகளுடன் தரைத்தளம் , முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் குடியிருப்பு கட்டி மாத வாடகை அடிப்படையில் துப்புரவு தொழிலாளர்களுக்கு வழங்கவும் மேற்படி 5 ஏக்கர் இடத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் குடியிருப்பு கட்டிடம் கட்ட ஒப்படைப்பு செய்யவும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வழியாக அரசின் அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 27268/08

**தீர்மானம் எண்: 144**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

11. இம்மாநகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து 31–3–2007ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வுபெற்ற செல்வி இரா. கலாவதி என்பவருக்கு அரசாணை (பத்தாண்டு)

எண் 340 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள் 08–08–2008யின்படி திருத்திய கூடுதல் சிறப்பு சேமநலநிதி அரசு மானிய தொகை ரூ 5,000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

சி1. 26008/08

**<u>தீர்மானம் எண்: 145</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.

12. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக பணி காரணமாக மே 2008 மற்றும் ஜுலை 2008ம் மாதத்தில் சென்னைக்கு பயணம் சென்று வந்ததற்கான பயணப்பட்டியல் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

சி1. 5495/08

**<u>தீர்மானம் எண்: 146</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

13. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட எஸ். எஸ். பிள்ளை தெருவில் திரு ராமசாமி என்பவர் உள்ளூர்த்திட்டக்குழுமம் மற்றும் மாநகராட்சி அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவதாகவும் திரு அச்சுதன் என்பவரின் மனையை ஆக்கிரமிப்பு செய்தல் தொடர்பாக திரு அச்சுதன் மற்றும் திருமதி உஷாதேவி என்பவர்கள் தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ். 436/08ல் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கில் தூத்துக்குடி மாமன்ற வழக்கறிஞர் திரு என். செல்வராஜ் அவர்களை மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்2. 26072/08

**<u>தீர்மானம் எண்: 147</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

14. தூத்துக்குடி நகரம் வார்டு 1, பிளாக் 9, நகரளவு எண் 1139/56 மற்றும் 1140/24 ஆகியவற்றில் தெருவில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 1, கமிலஸ் எண் 403/1டி (2) லியோனம்மாள் கொரைறா களண் 403/C (3) பெல்ஸி பிளாரன்ஸ் களண் 403/எ/3 மே.ப்டி 3 நபர்களுக்கு ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி 1920ஆம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 182ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டு திருமதி லியோனம்மாள் கொரைறா என்பவர் மட்டும் ஆட்சேபித்து நகராட்சியை 1வது பிரதிவாதியாக்கி தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் ஓஎஸ். 342/03 எண்ணிட்ட வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கானது valve அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டு தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ். 188/04 எண்ணிடப்பட்டு நகர்மன்ற வழக்கறிஞர் மூலம் வழக்கு நடைபெற்றதில் வழக்கு நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்தியதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ 2715/– கோரியுள்ளார். மேற்படி தொகையை அன்னாருக்கு வழங்கிடவும், மேற்படி வழக்கின் மீது நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகி மேல்முறையீடு செய்வதற்கும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 29975/03

**<u>தீர்மானம் எண்: 148</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**15.** கல்வி நிதியின் கீழ் இம்மாநகராட்சி பள்ளிகள் மேம்பாடு செய்யும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இணை இயக்குநர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்கள் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ் பிரகாரம் செய்ததற்கும் அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ **32,005/–** மெசர்ஸ் என்திரல் கம்யூனிகேஷன் (பி) லிமிடெட், சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

இ1. 857/08

**<u>தீர்மானம் எண்: 149</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**16.** தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்தட்டம் 2008–09ஆம் ஆண்டிற்கு பணிகள் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இணை இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் , சென்னை அவர்கள் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ் மாநிலம் முழுவதும் பிரசுரம் செய்வதற்கும், அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ 64,785/– மெசர்ஸ் என்திரல் கம்யூனிகேஷன் (பி) லிமிடெட், சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.
அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

இ1. 8959/08

**<u>தீர்மானம் எண்: 150</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

17. பக்கிள் ஓடை சீரமைப்பு பணிகள் செய்வதற்காக ஆர்சிசி தடுப்புச்சுவர் அமைப்பதற்காக வடிவமைப்பு வரைபடம் தயார் செய்ய முதல்வர் அரசினர் பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களின் 25–8–2008ஆம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைக் கட்டணம் ரூ 9000/– செலுத்த தெரிவிக்கப்பட்டதின்படி கட்டணம் செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

இ1. 23660/07

**<u>தீர்மானம் எண்: 151</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**18.** தூத்துக்குடி மாநகராட்சி புதிய கட்டிடம் கட்டுவதற்காக கட்டிட வரைபடம் தயாரிக்கப்பட்டதற்காக ஆலோசனை கட்டணம் ரூ. **30000/–** செலுத்த முதல்வர் அரசினர் பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களுடைய கடிதம் நாள் **25–9–2008**ல் தெரிவிக்கப்பட்டதின்படி ரூ **30000/–** (முப்பதாயிரம்) செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.
அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

இ1/018217/08

**<u>தீர்மானம் எண்: 152</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**19.** சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிஞர் அண்ணா மெட்ரிகுலோசன் பள்ளி நிர்வாகி திரு. P A ஆறுமுக நயினார் என்பவர் வழக்கு எண் W.A.NO. 3706/2004ல் மாநகராட்சி ஆணையர் அவர்களை 5வது பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்து வந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வழக்கிலிருந்து மாநகராட்சி ஆணையரை விடுவித்து எதிர் வழக்காட சென்னை உயர்நீதிமன்றத்தில் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. எஸ். கடற்கரை அவர்கள் ஆஜராகி நடத்துவதற்கும், மேற்படி வழக்கிற்கு ஆகும் அனைத்து செலவினஙகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதி வழஙகலாம்.

எப்3/18315/2001

**<u>தீர்மானம் எண்: 153</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.

**20.** தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதை ஒட்டி பாளையஙகோட்டை ரோடு வணிகவளாகம் மற்றும் மாட்டுப்பேட்டை சர்வே எண் வார்டு 4 பிளாக் 21இ நகர அளவு எண் 3468/1A 2B/1 இல் புதிய கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு தேவையான இடத்தில் உள்ள நகராட்சி கடை எண் 19, 23, 24, 25, 26, 27, 28, 29, 30 மற்றும் 32 ஆகிய கடைகள் மற்றும் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ள சைக்கிள் காப்பகம் ஆகிய இடஙகளை மாநகராட்சி கையகப்படுத்த வேண்டியுள்ளதால் மேற்படிகடைகள் மற்றும் சைக்கிள் காப்பகத்தின் உரிமத்தினை ஏல அறிக்கை நிபந்தனைகளின் விதி எண் 12 பிரிவு (எ) ன் படி ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி வணிகவளாகத்தில் 32 கடைகள் கட்டுவதற்கு ரூ 3000000/– MUDFதிட்டம் மூலம் கடனாக பெற்று 1997ல் முழுத்தொகையையும்திரும்பசெலுத்தப்பட்டுள்ளது. மேலும் கட்டப்பட்டுள்ள 32 கடைகளில் தற்போது அலுவலகம் கட்டப்பட்டுள்ள இடத்தில் உள்ள 12 கடைகள் மூலம் நடப்பு வருடம் வரை ரூ 1256284/– வருமானமாக கிடைத்துள்ளது. சைக்கிள் காப்பகம் மூலம் ரூ 1004865/– வருமானம் ஈட்டப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

அ16/9676/07

**<u>தீர்மானம் எண்: 154</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது.
அலுவலகக் குறிப்பு 2 பதிவு செய்யப்பட்டது.

**21.** தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள புதிய பேரூந்து நிலையத்தின் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் முன் பதிவு அறையின் முன்புறம் டைல்ஸ் அமைத்து இருக்கை வசதி செய்ய அன்னை ஜுவல்லர்ஸ் நிறுவனம் தூத்துக்குடி அவர்கள் தங்கள் சொந்த செலவில் செய்ய முன் வந்துள்ளார்கள் என தெரிவித்து கிளை மேலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், தூத்துக்குடி புறநகர் கிளை அவர்களது 28–8–2008ம் தேதிய கடிதத்தில் அனுமதி கேட்டுள்ளார்கள். எனவே மேற்கண்ட இடத்தில் இருக்கை வசதி செய்து கொள்ளவும், டைல்ஸ் அமைத்துக்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

1. டைல்ஸ் அமைத்து நவீனப்படுத்துவதன் மூலம் மேற்படி இடத்தின் மீது எவ்வித

உரிமையும் கோரக்கூடாது.

2. பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறு இன்றி அமைக்கப்பட வேண்டும்.
3. விளம்பரம் செய்து கொள்ள வேண்டும் எனில் தனியே கட்டணம் செலுத்தி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

இ5. 26687/08

**<u>தீர்மானம் எண்: 155</u>**

அலுவலகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

22. தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சியின் முக்கிய சாலைகளில் மேம்பாடு பணிகள் செய்வதற்காக (13 பணிகள்) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்கள் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கும், அதற்கான கட்டணம் ரூ 34,070/– மெசர்ஸ் என்திரல் கம்யூனிகேசன்(பி) லிமிடெட், சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

மபஎண் 70/2008–09

**<u>தீர்மானம் எண்: 156</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

23. தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு 'டி' பிளாக் 2 நகரளவு எண் 3 ரோச் விக்டோரியா பூங்காவில் தேசத் தந்தை அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி கோரி தூத்துக்குடி நகர் அழகுபடுத்தும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரவர்களுக்கு விண்ணப்பம் செய்ததின் தொடர்பாக மாவட்ட ஆட்சியரவர்களுக்கு விண்ணப்பம் செய்ததின் தொடர்பாக மாவட்ட ஆட்சியரவர்கள் மேற்படி சிலையை நிறுவ அனுமதி வழங்கக் கேட்டு சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு செயலருக்கு நகஎண் டி3. 58779/05 நாள் 9–8–2005 கடிதத்தில் பிரேரணை அனுப்பி அனுமதி வழங்கக் கேட்டதின் தொடர்பாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் இப்பொருள் சம்பந்தமாக விரிவான அறிக்கை கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 20–1–2006ஆம் தேதிய நகஎண் 60992/2005/எம்1 கடிதத்தில் கோரியுள்ளார். அதன் தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து மேற்படி வெண்கல சிலை நிறுவுவது குறித்து மாமன்றத்தின் இசைவினை பெற்று அனுப்புமாறு 29–9–2008ஆம் தேதிய நகஎண் டி3. 58779/03 கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே ரோச் விக்டோரியா பூங்காவில் அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவசிலையினை நிறுவிக்கொள்ள தூத்துக்குடி நகரை அழகுபடுத்தும் குழுவிற்கு அனுமதி அளிக்க வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி மாமன்றம் தனது இசைவினை தெரிவிக்கலாம்.

ஜி1. 19418/05

**<u>தீர்மானம் எண்: 157</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி ரோச் விக்டோரியா பூங்காவில் அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவிக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

24. தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்டஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 2A க்கு 15–10–2008ஆம் தேதி நடைபெற்ற ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திரு ஸ்ரீனிவாசன்ராவ்,<br>111/11சி/4ஏ போல்பேட்டை, தூத்துக்குடி | மாத வாடகை<br>ரூ 900/– |

| | | |
|---|---|---|
| 2 | செல்வி பி. ஷீபா<br>111/S/ 3 போல்பேட்டை, தூத்துக்குடி | மாத வாடகை<br>ரூ 1035/– |

அலுவலகக் குறிப்பு – ஜெயராஜ் ரோடு வணிக வளாக கடை எண் 2A க்கு க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த செல்வி பி. ஷீபா என்பவரின் மாத வாடகை ரூ 1035/– உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 27616 /2008

**<u>தீர்மானம் எண்: 158</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

25. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி(சி1) துறை அரசாணை எண் 632 நாள் 26–10–2007இல் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று ''உள்ளாட்சிகள் தினவிழா'' வாக கொண்டாடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும், மாணவ , மாணவியருக்கு போட்டிகள் ஏற்பாடு செய்து சுவரொட்டிகள் மற்றும் விளம்பர பதாகைகள் அமைப்பதற்கும், நிகழ்ச்சிகளுக்கான செலவினங்கள் உத்தேசமாக ரூ 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்)க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

நமத 2/2008

**<u>தீர்மானம் எண்: 159</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

26. இம்மாநகராட்சிப் பகுதியில் 3வது மைல் பாலம் முதல் ராஜாஜி பூங்கா வரையுள்ள இடங்களில் அமைந்துள்ள கோரம்பள்ளம் நல்ல தண்ணீர் கால்வாய் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி நகராட்சியிலிருந்து அறிவிப்பு கொடுத்ததில் அதனை எதிர்த்து திரு சௌந்தரராஜ் மற்றும் திரு ஜெயக்குமார் என்பவர்கள் தூத்துக்குடி விடுமுறை கால நீதிமன்றத்தில் (சார்பு நீதிமன்றம்) I.A 83/2008 in O.S. No. 32/2008ல் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை முதல் பிரதிவாதியாகவும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரை 2ம் பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கானது 9–6–2008ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்றது. அதன் தொடர்பாக மேற்படி வழக்கு தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் ஓஎஸ். 104/2008 என எண்ணிடப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கில் இம்மாநகர்மன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும், அதற்காகும்செலவினஙகளுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 14764/08

**<u>தீர்மானம் எண்: 160</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

27. இம்மாநகராட்சி பகுதியில் 3வது மைல் பாலம் முதல் ராஜாஜி பூஙகா வரையுள்ள இடஙகளில் அமைந்துள்ள கோரம்பள்ளம் நல்ல தண்ணீர் கால்வாய் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி அறிவிப்பு கொடுத்ததில் சர்வே வார்டு சி, பிளாக் 55 மற்றும் 56 சர்வே எண் 2ல் வசிக்கும் திரு ராஜபாண்டி நாடார் என்பவர் மேற்படி ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாது என தெரிவித்து மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P. (MD) No. 4781-2008ல் தொடர்ந்த வழக்கில் நகராட்சி ஆணையரை முதல் பிரதிவாதியாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களை 2ம் பிரதிவாதியாகவும் திரு டி. திரவியம். என்பவரை 3ஆம் பிரதிவாதியாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வழக்கில் வழக்கு முடியும் வரை ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாழ என தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரை மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 19515/08

**<u>தீர்மானம் எண்: 161</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.